www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V12T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2023

வகுப்பு 12

நேரம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:** **14×1=14**

1) இலக்கியத்தையும், மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணநூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

3) மாதவி பெற்ற பட்டம்
அ) நாட்டியப் பேரொளி ஆ) தலைக்கோலி
இ) நர்த்தகி ஈ) நாட்டிய மயூரி

4) இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

5) வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

6) மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் - வரிகள் இடம் பெற்ற நூல்?
அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம்
இ) தமிழ்விடுதூது ஈ) புறநானூறு

7) **பொருத்தி விடை தேர்க:**
அ) மாச்சீர் - 1. கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2. நாள், மலர்
இ) விளச்சீர் - 3. தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4. தேமா, புளிமா
அ) 1, 2, 4, 3 ஆ) 4, 3, 1, 2 இ) 2, 3, 1, 4 ஈ) 3, 4, 2, 1

8) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு
இ) மாவிலைக்கரி ஈ) கடுக்காய்

9) படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) காட்சி இ) செயல் ஈ) ஒலி

10) வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ) அண்மைக்காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக்காட்சி துணிப்பு
இ) நடுக்காட்சி துணிப்பு ஈ) காட்சி மறைவு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

V12T

11) ஆராய்ந்து சொல்கிறவர்?

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர்

இ) தூதுவர் ஈ) உறவினர்

12) கைவிட்ட தேசம் - என்னும் நாவலின் ஆசிரியர்

அ) சுகந்தி சுப்பிரமணியன் ஆ) தமிழ்நதி

இ) முகம்மது இராவுத்தர் ஈ) சுரதா

13) ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்

அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

14) ஹைதராபாத்தில் வெளியாகும் "நிறை" மாத இதழின் ஆசிரியர் யார்?

அ) உத்தமசோழன் ஆ) சாந்தா தத்

இ) தமிழ்நதி ஈ) ஜலாலுத்தீன் ரூமி

## பகுதி - II

### பிரிவு - 1

3×2=6

**ஆ) எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி:**

15) வசனம், கவிதை வேறுபாடு தருக.

16) ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு வரைக.

17) "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" நூல் பற்றிக் குறிப்பு வரைக.

18) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

### பிரிவு - 2

2×2=4

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:**

19) "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே" தொடருக்கு பதவுரை எழுதுக.

20) பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

21) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

### பிரிவு - 3

7×2=14

**ஈ) எவையேனும் ஏழனுக்கு விடை தருக:**

22) **உவமைத் தொடர்களைச் சொற்றொடரில் அமைத்திடுக:**

அ) கிணற்றுத் தவளை போல

ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

23) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

தலைமை

24) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:**

அ) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவிருக்க வேண்டியதான.

ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

25) **கலைச்சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் தருக:**

அ) Allegation ஆ) Debit Card

26) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**

அலை, அழை



www.Padasalai.Net

27) **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் புணர்ச்சி விதி தருக:**

அ) இனநிரை ஆ) புதுப்பெயல்

28) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) செய்த ஆ) நினைக்கின்ற

29) **தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:**

அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

30) திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

## பகுதி - III

**ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

### பிரிவு - 1

**உ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×4=8**

31) வாடகைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

32) அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?

33) யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே - உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக.

34) சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

### பிரிவு - 2

**ஊ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி:** **2×4=8**

35) சங்கப் பாடல்களில் ஒளிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

36) சென்னை நகரின் போக்குவரத்து வளர்ச்சி குறித்து எழுதுக.

37) திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38) நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

### பிரிவு - 3

**எ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39) தொழில் உவமை அணி **(அல்லது)** சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40) "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" - என்னும் பழமொழியினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

41) **தமிழாக்கம் தருக:**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deep-tooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



42) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

43) பா நயம் பாராட்டுக. (மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக):

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கனமசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- **திரிகூடராசப்பக் கவிராயர்**

## பகுதி - IV

ஏ) **பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக:** **3×6=18**

44) அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

**(அல்லது)**

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45) அ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை வரை.

**(அல்லது)**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுது.

46) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி - V

ஐ) அடிபிறழாமல் **செய்யுள் அடிகளை எழுதுக:** **4+2=6**

47) அ) "துன்புளது .........." எனத் தொடங்கும் கம்பராமாயணச் செய்யுள்.

ஆ) "செயல்" என முடியும் குறளை எழுதுக.

----------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com